RELEASE

# "B HAKTHI"

*A Stupend... ...ligious Hit solving the greatest problem.*
*Which is greater? "BHAKTHI or THAPAS"*



MISS LAKSHMI BAI IN "BHAKTHI"
***Produced at the***
**VEL PICTURES' STUDIO, MADRAS.**

THE JOTHI FILM CO., TRICHY.

*presents :*

"THIRUPPUGAL"

# ARUNAGIRINATHAR

*Featuring ;*

MR. T. M. MANICKA BAGAVATHAR & OTHERS.

பம்பாய் வாடியா மூவிடோனில் தயாரிக்கப்பட்டது.




ராஜா எக்னிக் — உன்னத டைரக்ஷன்

திருச்சி ஜோதி பிலிம் கம்பெனியாரின்

''திருப்புகழ்''

# அருணகிரிநாதர்

நடிகர்கள்.

**T.M.** மாணிக்கபாகவதர் அருணகிரிநாதர்

| | | | |
|---|---|---|---|
| | T. G கணேசன் | ... | சம்பந்தாண்டான் |
| Master. | S. முத்துசாமி | ... | பால அருணகிரி |
| | T. N. சொக்கலிங்கம் | ... | மைனர் அருணகிரி |
| | | | சுப்பிரமணியர் |
| | T. K. லெக்ஷ்மணன் | ... | சோமநாதன் |
| | G. நாகராஜன் | ... | சமையல்காரன் |
| | M. M. மாரியப்பன் | ... | மைனர் |
| | | | சம்பந்தாண்டான் |
| | S. M. கௌரிசங்கர் | ... | கவிசை சேவகன் |
| | T. K. ராமசுவாமி பத்தர் | | சாது |
| | T. K. சோமசுந்தரம் | ... | ஜமீன்தார் |
| | S. சேஷய்யர் | ... | வில்லிபுத்தூரார் |
| | T. N. நடராஜன் | ... | ப்ரபுடதேவராயன் |
| மிஸ் | T. L. தேவி | ... | முத்தம்மை |
| | V. சுப்புலெக்ஷிமி | ... | ஆதி |
| | C. சந்திரா | ... | மாதவி |
| | D. சிவசங்கரி | ... | கற்பகம் |
| | T. N. மனோன்மணி | ... | ஸ்ரீராஜேஸ்வரி |

மைசூர் சமஸ்தான வித்வான்

| | | |
|---|---|---|
| S. நாராயண அய்யங்கார் | ... | கோட்டுவாத்தியம் |
| G. ராமநாதன் | — | ஆர்மோனியம் |
| R. சேதுராமய்யர் | — | புல்லாங்குழல் |
| T. R. கோவிந்தராஜுலு நாயுடு | | |
| | | பாஞ்ஜோ & ப்யானு |
| T. A. மீனாக்ஷி சுந்தரம் | — | மிருதங்கம் |
| | | [தபேலா |

ராஜா. எக்னீக் ... டைரக்ஷன்

**Mr. J. B. H. Wadia** சொந்த மேற்பார்வையில்

பம்பாய் வாடியா மூவிடோனில் தயாரிக்கப்பட்டது.

முருகன் துணை

# திருப்புகழ் - அருணகிரிநாதர்

## கதையின் வரலாறு

---

பாரதப் புவியின்கண் தமிழ்நாட்டில் சிறந்து விளங்கும் ஸ்தலமான திருஅண்ணாமலையில் சுமார் 400-வருஷங்களுக்கு முன், கோவில் பணிசெய்யும் உருத்திர கன்னிகையர் வகுப்பில் பிறந்த முத்தம்மை, தனக்கு ஆண் மகவை இல்லாமையால் முருகனைக் கோரி, பல நோன்புகள் புரிந்துவரும் நாளில், முத்தம்மைக்கு ஒரு நாள் கனவில் முருகன் தோன்றி, உனக்குக் கௌமார சமயாசாரியனாக விளங்கும் ஓர் புதல்வன் பிறப்பான். அவன் உலகம் போற்றும் உத்தமனாக விளங்குவான், எனக் கூறி மறைந்தார். முத்தம்மைக்கு அதன்படியே அருணகிரி பிறந்தார். அருணகிரிக்கு ஏழாம் ஆண்டில் ஒரு நாள் முத்தம்மை பூஜைசெய்து கொண்டிருக்கையில், திடீரென மார் வலி தோன்றி பிராணாவஸ்தையில் தன் மகள் ஆதியை அருகழைத்து முருகன் கனவில் கூறியதைத் தெரிவித்து, அருணகிரி மனம் வருந்தாது எது கேட்டாலும் கொடு, மறுமொழி கூறாதே, எனக்கூறி உயிர் துறந்தாள்.

ஆதி அம்மை தாய் சொல்தவறாது தம்பி அருணகிரியை காத்துவரும் நாட்களில், அருணகிரி, பன்னிரண்டு வயதிலிருந்து பூர்வ கர்மவாசனையினால், பல துஷ்டசிநேகம் ஏற்பட்டு, தாசி வீடே சதமென்று சென்று கர்ம வியாதியால் பீடிக்கப்பட்டு வருகையில் மாதவி, கற்பகம் என்னும் இரு தாசிகளின் இன்பத்தை அனுபவித்து வருகிறார். ஆதி தன் வறுமை நிலையையும், தன் சோதரன் செய்கைகளையும், அவன் சரீர நிலைமையையும், நினைந்து வருந்திக் கொண்டிருக்கையில், அருணகிரி தன் குடும்பநிலை அறியாது, தாசி வீடு செல்ல ஆதியைப் பொருள் கேட்க, ஆதி ஒன்றும் தோன்றாதவளாய் தாயை நினைந்து வருந்தி ஒருவாறு தேறி அருணகிரியிடம் சென்று, ஒரு பெண் வந்திருப்பதாகத் தெரிவித்து, தனது படத்தையே அவனிடம் கொடுக்க, அப்படத்தைப் பார்த்த அருணகிரி ஒன்றும் தோன்றாதவராய் விழித்து, திகைத்து, மதிமயங்கி, பித்தனைப்போல் தன்னுடைய செயல்களை நினைந்து வருந்தி, வல்லாளன் கோபுரம் மீது ஏறி முருகனை நினைந்து வீழ, எம்பெருமான் சந்நியாசியாகத் தோன்றி திருக்கரங்களில் ஏந்தி, விடுத்து கௌமார சடாட்சரத்தை உபதேசித்துக், "கண்டி ஜபமாலை அணிந்து" கோபுரத்தின் வடபாலுள்ள மண்டபத்தின் ஓர்புறம் தியானம் செய், முருகன் அருள்புரிவார், எனக்கூறி மறைந்தார். அருணகிரி ஆனந்தக்கடலில் மூழ்கி, உபதேசப்படி சென்று த்யானித்து வருகையில், ஆதி தன், சகோதரன் பிரிவாற்றாமையால் மதி மயங்கி, பலவிடங்களில் தேடி கஷ்டப்பட்டு மண்டபத்திலிருப்பதாகத் தெரிந்து அங்கே சென்று, அவரை இல்லம் வரும்படி வேண்டியும் பயன்படாது வீடு திரும்பினாள்.

முருகன் அருணகிரிக்கு முன் தோன்றி, ஆசி கூறித் திருப்புகழ் அடியெடுத்துக் கொடுத்து தாம் கோயில் உருகொண்டுள்ள திருப்பதிகளுக்குச் சென்று, தம்மைப் புகழ்ந்து பாடும்படி ஆக்ஞாபித்து மறைகிறார். அருணகிரி ஆறுமுகன் அருள் மொழிகளைச் சிரமேற்கொண்டு உடனே புறப்பட்டு, சுவாமிமலை, திருச்சி, வயலூர்

விராலிமலை, குன்றக்குடி, திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், சென்று, பழனி வருகையில் முருகனது பக்தர்களான கலிசை, சோமநாதர் ஆகியோர் அருணகிரியாரைச் சந்தித்து இல்லம் அழைத்து, உபசரித்து, வீரை நகரில் கௌமாரசமய உபந்நியாசம் செய்து, அவ்விட மிருந்து, திருத்தணி வருகையில், பால்ய தாசிவீட்டுத் தோழர், இருவர்கள், தாசிகளால் தரித்திரநிலைமையை அடைந்து காட்டில் கஷ்டப் பட்டு, தாக வேட்கையினால் நதிக்கரைக்கு வருகையில் அருணகிரியாரைக் கண்டு, அவரது தவக்கோலத்தையும். திருப்புகழின் சந்தத்தையும், வண்ணத்தையும் குறை கூற. அவர்கள் சாம்பலாகிறார்கள். அருணகிரியார் முருகன் திரு அருளால் அவர்களை உயிர்பெற செய்து, ஆசீர்வதித்து, அண்ணாமலை செல்லுகிறார்.

பிரபுட தேவராயன் தர்பாரில் வில்லிப்புத்தூரார் உபன்யாசம் செய்கையில் அருணகிரியாரின் பிரபாவம் அறிந்த அரசன், அன்பு கூர்ந்து வில்லிப்புத்தூராரிடம் அருணகிரியின் திருப்புகழ் வண்ண நலங்களைத் தெரிவிக்க, வில்லிப்புத்தூரார் திருப் புகழை மறுத்துக்கூற உடனே அரசன் புலவர்களை அனுப்பி அருணகிரியாரை வர வழைக்க சபையில் அருணகிரியார் திருப்புகழ் பாட, வில்லிப் பொருள் கூறமாட் டாமல் தலைகுனிய, சாக்தேய மத தேவி உபாசனை உள்ள சம்பந்தாண்டான் கோபங்கொண்டு, அருணகிரியாரை எதிர்த்து, வில்லிப்புத்தூராரை இழிவுபடுத்திய தாக நினைத்து அருணகிரியார் உண்மை பக்தரானால் அவர் வணங்கும் முருகனை காட்டட்டும், நான் வேண்டுமானால் என் தேவியைக் காட்டுகிறேன், இல்லையேல் நாட்டெல்லையை விட்டேகுவேன், என்றுகூற அருணகிரியாரின் வேண்டு கோளின் படி சம்பந்தாண்டான் பூஜாமண்டபத்தில் தேவியை அழைக்க பூஜைசெய்ய, சம்பந்தாண்டானுக்கு மாத்திரம் தேவி காக்ஷிகொடுத்து மறைய. அரசன் தேவி யைக் காணாது நகைக்கிறான். உடனே அருணகிரியார் எழு திரையிட்டு, அரசனை ஒரு நேத்திரத்தால் முருகனைப் பார்க்கச் சொல்லுகிறார். அரசன் ஆனந்தத்தால் இரு நேத்திரங்களாலும் பார்த்து விடுகிறார். உடனே நேத்திரங்களுக்குப் பங்கம் வர முருகன் அருளால் அரசன் மீண்டும் கண் ஒளி பெற, தாம் கொடுத்த வாக்குப் படி சம்பந்தாண்டான் நாட்டைவிட்டு விலகி அருணகிரியாரைக் கொண்டு பாரிஜாத புஷ்பம் கொண்டுவரும்படிக்கு அரசனுக்கு லிகிதம் எழுதி அனுப்ப, அரசன் அவ் வாறே அருணகிரியாரைப் பாரிஜாத புஷ்பம் கொண்டுவரும்படி வேண்ட, அருண கிரியார் சம்மதித்து எவ்விதம் கொண்டுவருவது என்று திகைத்து நிற்கும் சமயம் உடனே அசரீர் தோன்றி உபாயம் சொல்ல, அருணகிரியார் தன் ஸ்தூல சரீரத்தை மண்டபத்தில் வீழ்த்தி கிளி ரூபம் எடுத்து செல்லுகிறார்.

சம்பந்தாண்டான் அரசனிடம்சென்று பாரிஜாதம் கொண்டுவர முடியாமல் அரு ணகிரியார் இறந்ததாகச் சொல்லி அவருடைய சரீரத்தைக் காட்டித் தகனம் செய் கிறான். உடனே தேவி தோன்றி அருணகிரி இறக்கவில்லை யெனக்கூறி மறைகிறது. அருணகிரியார் கிளிரூபமாக பாரிஜாதம் கொணர்ந்து அரசன் கரங்களில் கொடுக்க, அரசன் திடுக்கிட்டு ஒன்றும் தோன்றாதவனாய் மெய் மறந்து இருக்கையில் ஸ்ரீதேவி தோன்றி, அருணகிரி இறக்கவில்லை. கிளி ரூபமாக ஊழிக்காலம் முழுவதும் என் திருக்கரத்தை அலங்கரிப்பான், என்றுசொல்லி ஜோதி மறைகிறது.

சுப மங்களம்!

# அருணகிரிநாதர்

## பாட்டு.

1. கோரஸ்

ஸ்ரீ கணபதியே நமோ தீனரைக்காரும்
ஆகம முறையே பற்றி ஆதரீ எமை என்றுமே
அகிலம் போற்றும் அருண கிரியாரின்
அன்பு நிறைந்த இன்பக் கதையாட
தெய்வத் திருப்புகழும் திகட்டா திருக்குமே
தித்திக்கும் தேனே போலே பக்தியளிக்குமே
உய்யும் வகையெனவே உலகோர் புகழ்ந்திட
ஊட்டிடுமதையே உளமே உறுதிபட (ஸ்ரீ)

2. (பூரிகல்யாணி—ஆதி தாளம்)

பல்லவி

சரவண பவகுக
சரணம் ஷண்முகனே
அரவணை துயில்மால்
அன்புடை மருகோனே

அனுபல்லவி

பரமனின் பாலனுய்ப்
பாரினில் தோன்றியே
பக்தருக்கு அபயம்
பாலிக்கும் முருகோனே

3. (பந்துவராளி—ஆதி தாளம்)

பல்லவி

வாடேரா தெய்வமு மனஸா

அனுபல்லவி

ஆடின மாடலு கபடனேர்ச்சுனு
ஆஜனவிகர்கமு கல்கின

சரணம்

தாத்ரு வினுதுடைன த்யாகராஜு
சேதமுசலந்தி பாகப்ர
லோசனுன்மய மனசு ரொளின்சி
சீதாபதியனி பேருகல்கின (வா)

4. (தேசிகத்தோடி—ஆதி தாளம்)

பல்லவி

பாருக்குள்ளே நல்ல நாடு—எங்கள்
பாரத நாடு.

அனுபல்லவி

1. ஞானத்திலே பர மோனத்திலே உயர்
மானத்திலே அன்ன தானத்திலே
கானத்திலே அமுதாக நிறைந்த
கவிதையிலே உயர் நாடு. (போ)

2. தீரத்திலே படை வீரத்திலே நெஞ்சில்
ஈரத்திலே உபகாரத்திலே
பாரதிலே பெரும் பாக்ய மிகுந்த
நம் பாரத நாடு. (பா)

5. கும்மி

அமரர்புகழும்
குமர குருவே
சரவணபவனே
மரகத மயில்வாக
மாதுகுற வள்ளிமோக
மாதவத்தோர் புகழ் மால்மருகா.

6. (கல்லோதான் - என்றமெட்டு)

சொல்லாலே என்னை என்றும்
சொகுசு காட்டும்
ஷோக்கு ரத்தினமே.





ஜோதி அருணகிரிநாதரில் சில காக்ஷிகள் !

வில்லாலே மாரன் வாட்ட
வீழ்ந்து வாடுகிறேன் (சொ)

(தோகையறு)

கல்லாத பேர்களும்
கனமிக்க பணமீந்து
கருத்துடன் அணைந்திடிலே
பொல்லாத மதனையும்
புறங்காட்டி ஓட்டிவிடும்
புகழையே கொள்வோம்
என்றும் (சொ)

7. (ப்ரேமகிளைய - என்ற மெட்டு)

மனமது மகிழவே மலராது பறித்தே
மாதர்கள் மீதிலே வேகமதாகவே
இனமது சேர்ந்திட குணமதாய் எறிந்தே
எனதக மகிழவே இருந்திடுவேனே
எங்குற்றான் என்றுமே கண்டிடுவீரே. (ம)
மாதவி எங்குற்றாள்
மலறெரிந்த
வாதிட நீங்களே
வனைந்திடுவீரே


8. (இந்துஸ்தான் காபி—ஆதி தாளம்)

பல்லவி

மானே மயிலே மதி முக அமுதே
தேனே பாகே. மனமதிலே.

அனுபல்லவி

ஏனோவாது புரிவது ஏனோ
இனங்குதல் சரியல்லவோ
மனமே ஆறு மையலும் தீரா
பணமே கோருவரே
இனமே ஒன்றாய் இருப்பதின் பலனோ
குணமே பெரிதல்லவோ. (ம)



ஜோதி அருணகிரிநாதரில் ஓர் காக்ஷி!



ஜோதி அருணகிரிநாதரில் கோட்டு வாத்தியம்
நாராயண அய்யங்கார் கோட்டுவாத்தியக் கச்சேரி.

9. சாது (மன்கியாகி கோலு பாபா - என்ற மெட்டு)

பல்லவி

மதி பெறும் மானிடரே கேளும்

அனுபல்லவி

விதிதனை நோக்கிடும் கெதிதனை உலகில்
வீழ்ந்திடல் சாத்யமோ அறிவீரே.
சதி செய்யும் தற்கொலை சரியல்ல தெரிவீர்
சங்கடம் கூட்டிடும் புவி தனிலே

சரணம்

சரிவழி அறிவது சாலப்பெரிது
மறுஜென்மம் வேண்டுதல்
மதியல்லகாணீர்
இருவினை போக்கிட இருப்பது முறையே
குறியாக எதனையும் கோரிடுவீரே
குவலயம் போற்றிடும் கொள்கையும் நீரே. (மதி)

10. (முகாரி — ஆதி தாளம்)

பல்லவி

அருணகிரியை நான் காணேன்
அன்புதந்த துரையைக் காணேன் (அ)

அனுபல்லவி

கருணை கொண்டென்னைக் காதலித்தாரென்றும்
தருணமிது என்னைத் தயங்கவிட்ட நாதன்

சரணம்

மாரனை வென்ற மன்னனே இன்றே நீர்
மறைந்த காரணம் ஏனோ
கோரமதாகக் குலைந்துவாடும் என்னைச்
சீருடனே வாழச்சிறப்பாய் வாரும் இன்றே (அ)

11. (செஞ்சுருட்டி - திருபுடை தாளம்)

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச்சரவண
முத்திக்கொரு வித்துக்குருபர எனவோதும்
முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித்திருவரு
முப்பத்து மூவர்க்கத்தமரரு அடிபேணப்
பத்துத்தலை தத்தக்கணை தொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத்திகிரியி லிரவாகப்
பத்தற் கிரதத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத்தகுபொருள்
பட்சத்தொடு ரட்சித்தருள்வது மொருநாளே
தித்தித்தெய வொத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப்பயிரவி
திக்கொட்க நடிக்கக்கழுகொடு கழுதாடத்
திக்குப்பரி அட்டப்பயிரவர்
தொகுகுத்தொகு தொக்குத்தொகுதொகு
சித்ரப்பவுரிக்குத் த்ரிகடக எனவோதக்
கொத்துப்பறை கொட்டக்களமிசை
குக்குக்குகு குக்குக்குகுகுகு
குத்திப்புதை புக்குப்பிடியென முதுகூகை
கொட்புற்றெழ நட்பற்றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக்குலகிரி
குத்துப்பட வொத்துப்பொரவல பெருமாளே

12. (கரகரப்ரியா — ஜம்பை தாளம்)

வாதமொடுசூலை கண்டமாலை குலைநோவுசந்து
மாவலி வியாதிகுன்ம மொடுகாசம்
வாயுவுடனேபரந்த தாமரைகள் பீனசம்பின்
மாதர்தரு பூஷணங்கள் எனவாகும்
பாதகவியாதி புண்கள் ஆனதுடனே தொடர்ந்து
பாயலை விடாதுமங்க இவையால் நின்
பாதமலரானதின்க ணேயமறவே மறந்து
பாவமதி பானமுண்டு வெறிமூடி

எதமுறுபாசபந்த மாணவலை யோடுழன்று
ஈனமிகு சாதியின்க — ணதிலேயான்
ஈடழிதலானதின்பின் மூடனெனவோது முன்புன்
ஈரவருள் கூறவந்து — எனையாள்வாய்
சூதமகிழ் பாலைவள்ளி தாதுவளர் சோலைதுன்றி
சூழுமதில் தாவிமஞ்சி — னளவாகத்
தோரணநன் மாடமெங்கு நீடுகொடியே தழைந்த
சுவாமிமலை வாழவந்த — பெருமாளே

13. (செஞ்சுருட்டி – ஆதி தாளம்)

நெய்த்தசுரிகுழ லறலோ முகிலோ
பத்மநறுநுதல் சிலையோ பிறையோ
நெட்டையிணைவிழி கணையோ பிணையோ — இனிதூறும்
நெக்கஅமுதிதழ் கனியோ துவரோ
சுத்தமிடறது வளையோ கமுகோ
நிற்குமிளமுலை குடமோ மலையோ — அறவேதேய்ந்
தெய்த்தஇடையது கொடியோ துடியோ
மிக்கதிருவரை அரவோ ரதமோ
இப்பொனடியிணை மலரோ தளிரோ — எனமாலாய்
இச்சைவிரகுடன் மடவாருடனே
செப்பமருளுட னவமே திரிவேன்
ரத்னபரிபுர இருகா லொருகால் — மறவேனே
புத்தாமணர்கள் மிகவே கெடவே
தெற்குநாபதி திருநீ றிடவே
புக்கஅனல்வய மிக எகுயவே — உமையாள்தன்
புத்ரனெனஇசை பகர்நூல் மறைநூல்
கற்றதவமுனி பிரமா புரம்வாழ்
பொற்பகவுணியர் பெருமா னுருவாய் — வருவோனே
சத்தமுடைய சண்முகனே குகனே
வெற்பிலெறிசுட ரயிலா மயிலா
சத்திகணபதி யிளையா யுளையா — யொளிகூரும்
சக்ரதரிஅரி மருகா முருகா
உக்ரஇறையவர் புதல்வா முதல்வா
தட்பமுளதட வயலூ ரியலூர் — பெருமாளே

14. (சமாஸ் - ஆதி தாளம்)

மாலாசை கோபமோ யாதொநாளு
மாயாவிகார வழியேசெல்
மாபாவி காளிதானேனும் நாத
மாதா பிதாவு மினிநீயே
நாலானவேத நூலாக மாதி
நானேதினேனு மிலவீணே
நாள்போய் விடாம லாறாறு மீதில்
ஞானோபதேசம் அருள்வாயே
பாலாகலார ஆமோத லேப
பாடீர வாக அணிமீதே
பாதாளபூமி ஆதாரமீன
பானீய மேலே வயலூரா
வேலாவிராலி வாழ்வே சமூக
வேதாள பூத பதிசேயே
வீராகடோர சூராரியேசெ
வேளே சுரேசர் பெருமானே

15. (பியாக் — ஆதி தாளம்)

சந்ததம் பந்தத் தொடராலே
சஞ்சலந் துஞ்சித் திரியாதே
கந்தனென் றென்றுற் றுனைநாளும்
கண்டுகொண் டன்புற் றிடுவேனோ
தந்தியின் கொம்பைப் புணர்வோனே
சங்கரன் பங்கிற் சிவைபாலா
செந்திலங் கண்டிக் கதிர்வேலா
தென்பரங் குன்றிற் பெருமாளே

16. (சிந்து பைரவி — ஆதி தாளம்)

விறல்மாரனைந்து மலர்வாளிசிந்த
மிகவானிலிருந்து வெயில்காய
மிதவாடைவந்து தழல்போலவொன்ற
வினைமாதர் தந்தம் வசைகூறக்
குறவாணர்குன்றி லுறைபேதைகொண்ட
கொடிதான துன்ப மயல்தீரக்

குளிர்மாலையின்க ணணிமாலைதந்து
குறைதீற வந்து குறகாயோ
மறிமானுகந்த இறையோன் மகிழ்ந்து
வழிபாடுதந்த மதியாளா
மலைமாவுசிந்த அலைவேலையஞ்ச
வடிவே லெறிந்த அதிதீரா
அறிவாலறிந்து னிருதாளிரைஞ்சு
மடியாரிடைஞ்சல் களைவோனே
அழகானசெம்பொன் மயில்மேலமர்ந்து
அலைவா யுகந்த பெருமாளே

17. (ரீதிகௌள — ஜம்பைதாளம்)

சிவனார் மனங்குளிர உபதேச மந்த்ர மிரு
செவிமீதிலும் பகர்செய் குருநாத
சிவகாமி சுந்தரி தன வரபால கந்த நின்
செயலே விரும்பியுளம் நினையாமல்
அவமாயை கொண்டுலகில் விருதாவலைந்துழலு
அடியேனை அஞ்சலென வரவேணும்
அறிவாக மும்பெருக இடரானதுந் தொலைய
அருள்ஞான இன்பமது புரிவாயே
நவநீத முந்திருடி உரலோடெ யொன்றுமரி
ரகு ராமர் சிந்தைமகிழ் மருகோனே
நவலோக முங்கைதொழு நிசதேவ லங்கிருத
நலமரன விஞ்சைகரு விளைகோவே
தெவயானை யங்குறமின் மணவாள சம்ப்ரமுறு
திறல்வீர மிஞ்சுகதிர் வடிவேலா
திருவாவி னங்குடியில் வருவேள் சவுந்தரிக
செகமேல் மெய்கண்டவிறல் பெருமாளே.

18. (ஹம்ஸாநந்தி — கண்டஜாதிதாளம்)

அபகார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனைநா னினைந்தருட் பெறுவேனோ
இபமாமு கன்தனக் கிளையோனே
இமவான் மடந்தையுத் தமிபாலா

ஜெபமாலை தந்தசற் குருநாதா
திருவாவி னங்குடிப் பெருமாளே.

19. (ரீதிகௌளை — ரூபகம் தாளம்)

பல்லவி

தேவ தேவா ஆண்டருள் நீ
தீன னென்னை காத்து நின்று (தே)

அனுபல்லவி

பாவமே ஒழிய பவமுமடைய
பதமே அளித்து பண்புடனே (தே)

சரணம்

கோபமே நீக்கி குறைகள் போக்கி
குணமும் திருத்தி மனதிலிருத்தி
தாபமும் நீங்க தவமும் ஓங்க
தாங்கி என்னை பாங்குடனே (தே)

20. (ஹம்ஸாநந்தி — ஆதி தாளம்)

அனுபல்லவி

எனதுயரகற்றும் காக்ஷிஸ்வரூபா - கருணை
புரியக் காங்கேயப் பிரதாபா

பல்லவி

மனதிற்கிசைந்த மலரடி சேவையருள மயில்
மீதே வருவாய் முருகா

சரணம்

தெய்வயானை மகிழும்மழுக குமரேசா
தீனதயாபரனே முருகா
தேடக்கிடையா விருநிதியே
தெய்வசிகாமணி வேற்காரனே (ம)

21. (செஞ்சுருட்டி — ஆதி தாளம்)

சினத்தவர் முடிக்கும் பகைத்தவர் குடிக்கும்
செகுத்தவருயிர்க்கும் சினமாகச்
சிரிப்பவர் தமக்கும் பழிப்பவர் தமக்கும்
திருப்புகழ் நெருப்பென் றறிவோம்யாம்
நினைத்தது மளிக்கும் மனத்தையு முருக்கும்
நிசிக்கரு வருக்கும் பிறவாமல்
நெருப்பையு மெரிக்கும் பொருப்பையு மிடிக்கும்
நிறைப்புக ழுரைக்குஞ் செயல்தாராய்
தனத்தன தனத்தந் திமித்திமி திமித்திந்
தகுத்தகு தகுத்தந் தனபேரி
தடுட்டுடு டுடுட்டுண் டெனத்துடி முழக்கும்
தளத்துட னடக்கும் கொடுசூரர்
சினத்தையு முடற்சங் கரித்த மலைமுற்றுஞ்
சிரித்தெரி கொளுத்துங் கதிர்வேலா
தினைக்கிரி குறப்பெண் தனத்தொடு சுகித்தெண்
திருத்தணியிருக்கும் பெருமாளே

22. (விருத்தம் — மோகனம்)

விண்ணிலுறை வானவரில் யாரடி படாதவர்
விரிஞ்சனரியே முதலினோர்
மண்ணிலுறை வானவரில் யாரடிபடாதவர்
மனுமக்கள் முதலோர்கள்
தவக்கண்ணிலுறை நாகர்களில் யாரடிபடாதவர்
கட்செவி மகிபன் முதலோர்
எண்ணில்பல யோனியிலும் யாரடிபடாதென
விருந்துழி யிருந்துழியரோ

23. (கரகரப்பிரியா — ஆதி தாளம்)

கலியை அலைத்து தொலைத்து விட்டொரு
பிணியை அடித்து துறத்தி விட்டெழு
கவலை நெருப்பை தணித்து விட்டற நெறியாலென்
அலையு மனத்தை பிடித்து வைத்ததில்
உறையும் இருட்டை கருக்கலருக் குறின்
அழகு விளக்கை பதித்து வைத் தருளாதே

24. (மாண்டு — ஆதி தாளம்)

பல்லவி

மா மாகத மணியே மாயே
மாதவன் சோதரி ஆதரி நீயே

அனுபல்லவி

தாமத மேனனியே என் தாயே

சரணம்

மாமதி முகவச ஞம்ருத பாஷணி
மறையவர் தொழுதிடும் மீன லோசனி
தெரிசனம் தரவருவாய் தயை புரிவாய் (மா)

25. (ரூபகம் — தாளம்)

ஹம்ஸத்வனி அதல சேடனாட அகில மேருமீதாட
அபினகாளி தாஞட அவளோடன்
றதிரவீசி வாதாடும் விடையிலேறு வாராட
அருகுபூத வேதாள மவையாட
ஷண்முகப்ரியா மதுரவாணி தாஞட மலரில் வேதனாட
மருவு வானுளோ ராட மதியாட
வனச மாமியாராட நெடிய மாமனாட
மயிலுமாடி நீயாடி வரவேணும்
கானடா கதை விடாத தோள்வீம னெதிர்கொள் வாளியால்நீடு
கருதலார்கள் மாசேனை பொடியாக
கதறுகாலி போய்மீள விஜயனேறு தேர்மீது
கனகவேத கோடூதி அலைமோதும்
நீலாம்புரி உததிமீதி லேசாயு முலகமூடு சீர்பாத
உவணமூர்த்தி மாமாயன் மருகோனே
உதயதாமமார்பான ப்ரபுடதேவ மாராஜ
னுளமுமாட வாழ்தேவர் பெருமாளே

26. (கமாஸ் — ஆதி தாளம்)


கோப லோப குணமே திருத்தி
குவலய மாண்டிடும் குணக்குன்ற மன்னையே

1 தாபமும் பாபமும் தனதுபக் தர்களையே
தாங்கி நின்றிடாது தற்காத் திடுவளே
2 நீதமும் வேதமும் நின்று ஓங்கிடவே
நிதமும் வேள்விதனையே நினைத்திடச் செய்வளே

(விருத்தம் காம்போதி)

ஆவிக்கு மோசம் வருமாறறிந்துன் னருட்பதங்கள்
சேவிக்க வென்று நினைக்கின்றிலேன் வினைதீர்த்தருள்வாய்
வாவித் தடவயல் சூழுந் திருத்தணி மாமலைவாழ்
சேவற்கொடி யுடையானே அமரர் சிகாமணியே

சுபம் ! சுபம் !! சுபம் !!!



ஜோதி அருணகிரிநாதரில் ஒரு காட்சி !

# கூடிய சீக்கிரம்

வெளிவரும் எமது அடுத்த படங்கள்

## T. M. மாணிக்க பாகவதர்

நடிக்கும்

# அப்பூதி அடிகள்

தமிழ் பேசும்

புராண படங்கள்!

கர்ணாமிர்த கானங்கள்!

உயர்தர நடிப்புகள்!

# ராமலிங்கசுவாமிகள்

எதிர்பாருங்கள்!

# ஜோதி "அருணகிரிநாதர்"




*For Bookings apply to:*

**THE JOTHI FILM COMPANY,**

**BIG KAMMALA STREET, TRICHY.**


தியோடர் அச்சுக்கூடம், 211, பெரியகடைவீதி, திருச்சி.